04.12.2024
அசல் வழக்கு எண்: 13/2015

வா.சா.2 சாட்சி கற்பகவள்ளி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். சட்டங்கள் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் 1ம் பிரதிவாதியின் கணவர் நடராஜன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி விபரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் வள்ளியம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டு அவர் மேற்படி நடராஜன் என்பவருக்கு தாவா சொத்தை தான செட்டில்மெண்டு மூலமாக பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி வள்ளியம்மாள் எழுதிகொடுத்த தான செட்டில்மெண்டு என்றால் சரிதான். (**06.07.1971ம் தேதியிட்ட தான செட்டில்மெண்டு ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்பதற்கு எந்தவொரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

1ம் பிரதிவாதியின் கணவர் நடராஜன் என்பவருக்கு 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி, சாந்தி, சிவக்குமார், மகேஷ்வரி, நிறைமதி, காந்திமதி, கணேசன், தண்டபாணி மற்றும் கஸ்தூரி ஆகியோர்கள் வாரிசு என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 கிரைய ஆவணத்தில் இறந்துபோன நடராஜனின் மனைவி 1ம்

பிரதிவாதி மட்டும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். நடராஜன் இறந்த பிறகு அவருடைய தனித்து பாத்தியப்பட்ட சொத்தில் அவருடைய வாரிசுகள் அனைவருக்கும் இந்து வாரிசு உரிமை சட்டப்படி உரிமையுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவர் நடராஜன் அவருடைய வாழ்நாள் காலத்தில் எந்தவொரு குடும்ப ஏற்பாடோ, விருப்புருதி ஆவணமோ, தாவா சொத்தை பொறுத்து எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 குறைபாடு உள்ள ஆவணம் என்றால் சரியல்ல.

மேற்படி நடராஜனின் வாரிசுகளில் 8 வாரிசுகள் வாதிகளாக இருந்து தாவா சொத்தை பொறுத்து கடந்த 2015ம் ஆண்டு அசல் வழக்கு 18/2015 என்ற பாகபிரிவினை வழக்கை எனது தாயார் மீதும், 1ம் பிரதிவாதி மீதும் மற்றும் 4 பேர்களுக்கு எதிராக மதுரை மாவட்ட 6வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கில் கடந்த 28.09.2018ம் தேதியில் வாதிகளுக்கு ஆதரவாக முதல்நிலை தீர்ப்பும், தீர்ப்பாணை பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கின் தாவா சொத்தும் மேற்படி அசல் வழக்கு எண். 18/2015 ல் கண்ட தாவா சொத்தும் ஒன்றுதான் என்றால் சரிதான்.

2ம் பிரதிவாதி தாவா சொத்தின் கூட்டு உரிமை பங்குதாரர் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் சுவாதீனம் கூட்டு பங்குரிமையின் சுவாதீனம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கூட்டு பங்குரிமையின் சுவாதீனம் கொண்டுள்ள 2ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை

கோரியுள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைநிற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அசல் வழக்கு எண். 18/2015ல் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என்றால் சரிதான். (**அசல் வழக்கு எண். 18/2015 ல் ஏற்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 2 ஆகவும், தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ. 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

வா.சா.ஆ. 1 கிரைய ஆவணம் எழுதிகொடுத்த நாளிளேயே தாவா சொத்தை முழுவதுமாக கிரையம் கொடுக்க அவருக்கு உரிமையில்லை என்ற விபரம் அவருக்கு தெரியும் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி மற்ற பங்குஉரிமையாளர்களை மோசம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் கிரையம் பெற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக பொய்யாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. எனது தாயார் தாக்கல் செய்த இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் மற்ற உரிமையாளர்கள் உள்ள நிலையில் விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கேட்டிருப்பது ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் அசல் வழக்கு 18/2015 வழக்கு சம்பந்தமாக சொல்லவில்லை என்றால் பிராது சங்கதிகளில் இல்லாத விபரத்தை சொல்லமுடியாது என்பதால் சொல்லவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நடராஜனின் வாரிசுகள் அனைவருக்கும் தாவா சொத்தின் கூட்டு பங்கு

உரிமையாளர்கள் என்றாலும் அவர்களுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்றாலும் சரியல்ல. நான் வழக்கிற்காக அனைத்து விபரங்களையும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.